2 7 SEP 2010

சுருக்கம்

கலந்தாலோசனைக் கட்டணம் – திருப்பூர் மாநகராட்சியில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் பணிகளுக்கு கலந்தாலோசனை கட்டணம் (Consultation fees) நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.3) துறை

அரசாணை (நிலை) எண்: 215

நாள்: 23.09.2010

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.31, நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்கல் துறை, நாள் 11.02.2010
2. அரசாணை (நிலை) எண்.77, நிதித்துறை, நாள் 11.03.2010.
3. அரசாணை (நிலை) எண்.34, நகராட்சி நிர்வாகம் மற்றும் வழங்கல் துறை, நாள் 15.02.2010
4. புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரது கடித எண். நாள் 11.05.2010.

---

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திருப்பூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் மற்றும் கழிவுநீரகற்று திட்டங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும், திட்ட மேலாண்மை கலந்தாலோசகராகவும், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்த சட்டம் பிரிவு 1998 பிரிவு 16(f)–ன் கீழ் புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழகம் அறிவிக்கப்பட்டது. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இது குறித்த அரசிதழ் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

2. மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்காக செயல்படுத்தும் அனைத்து குடிநீர்த் திட்டங்களுக்கும் நூற்றுவீதக் கட்டணம் (Centage Charges) ஒரே சீராக 5% என நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்றும், இக்கட்டண வீதம், இந்த ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் என்றும், இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நிர்வாக ஒப்புதல் பெறும் அனைத்து குடிநீர் திட்டங்களுக்கும் இந்த 5% நூற்றுவீதக் கட்டணம் பொருந்தும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர், மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இக்கழகத்தால் திருப்பூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிக்களுக்கான நூற்றுவீதக் கட்டணம் குறித்து ஆணை ஏதும் வெளியிடப்படவில்லை என்றும், எனவே இந்த அரசாணையினை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்கும் நீட்டித்து கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடுமாறும் கோரியுள்ளார்.

(i) புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தால் திருப்பூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் கழிவுநீரகற்று

பணிகளுக்காகவும் 5% நூற்றுவீதக் கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும், நிர்வாக நலன் காரணமாக மேற்படி 5% நூற்றுவீதக் கட்டணத்தில்,

(அ) 2 சதவீதத்தினை விரிவான திட்ட அறிக்கை (Detailed project report) தயாரிப்பிற்கும், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் (Bid Document) தயாரிப்பிற்கும்,

(ஆ) 3 சதவீதத்தினை பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பாய்வு செய்வதற்கும் (Evaluation of Bids) மற்றும் திட்ட மேலாண்மைக்கும் (Project Management) என நிர்ணயம் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3–ல் உள்ள புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தால், திருப்பூர் மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் கழிவுநீரகற்று பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிப்பிற்கும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் (Bid Document) மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பாய்வு செய்வதற்கும் (Evaluation of Bids) மொத்த திட்ட மதிப்பீட்டில் 0.35 சதவீதத்தை கலந்தாலோசனைக் கட்டணமாக (Consultation fees) நிர்ணயம் செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் 16.08.2010 நாளிட்ட அ.சா.எண்.31060/BPE/2010–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
மேலாண்மை இயக்குநர்,
புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்,
சென்னை – 600 018.
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
சென்னை– 600 005.
ஆணையாளர், திருப்பூர் நகராட்சி,
திருப்பூர் – 600 018.
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக).

நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின்
தனிச்செயலர், சென்னை – 600 009.
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்) துறை,
சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நக2/மாந6) துறை,
சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.